நல்லூர் கிளைநூலகம்.

## குண்டை வெடிக்கவைத்தது 25 வயதுடைய பெண்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 12 இதழ் 267
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 29-10-1994

## பொலிஸார் தகவல்

(கொழும்பு)
கொழும்பு கிருண்ட்பாஸ் குண்டுவெடிப்பில் குண்டை வெடிக்க வைத்தவர் ஒரு பெண் என்பதை பொலிசார் நேற்று உறுதிசெய்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பான பெண் பற்றிய தகவலை பொலிசார் நேற்று (2ம் பக்கம் பார்க்க)

## குண்டை சுமந்த பெண் காமினியின் வேறொரு

### கூட்டத்திலும் காணந்பட்டார்

[கொழும்பு]
காமினி திஸாநாயக்காவின் முதலாவது தேர்தல்பிரசாரக் ட்டகூம் கொழும்பு பஞ்சிகாவத்தையில் நடைபெற்ற போது அந்தக் கூட்டம் வீடியோ ஒளிப்பதிவு செய்யப் (2ம் பக்கம் பார்க்க)

## சூத்திரதாரிகளைத் தேடி பொலிஸார் வலைவிரிப்பு!

(கொழும்பு)
கிருண்ட்பாஸ் பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் சூத்திரதாரிகளைத் தேடி பொலிசார் வலை விரித்துள்ளனர்.
இதன்பொருட்டு நாட்டின் (4ம் பக்கம் பார்க்க)

## இன்று நடைபெறவுள்ள

# காமினியின் இறுதிச் சடங்கில்

# கொழும்பில்கலவரம்வெடிக்கும்?

## - படையினர் பெருமளவில் குவிப்பு -

[கொழும்பு]
காமினி திஸாநாயக்காவின் இறுதிச்சடங்குகள் இன்று நடைபெற்றபின் கொழும்பில் வன்முறைகள் வெடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. கலவரங்களை கட்டுப்படுத்துவதற்கு அரசு பெருமளவு படையினரை கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் குவித்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனை உறுதி செய்வது போல நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த விஷமிகள் முயற்சி எடுத்து வருவதாகவும் பொது மக்கள் இதுகுறித்து விழிப்பாக இருக்குமாறும் தகவல் ஒலிபரப்பு சுற்றுலாத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளார்.
காமினி திஸாநாயக்காவின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக தென்பகுதி (2-ம் பக்கம் பார்க்க)

## மரணச்சடங்கின் போது அமைதியை பேணுக

### சிறிமா திஸாநாயக்கா

(கொழும்பு)
கொலை செய்யப்பட்ட தமது கணவர், எதிர்க்கட்சித் தலைவர்காமினிதிஸாநாயக்காவின் மரணச்சடங்கின் போது அமைதியாகவும், ஒழுங்காகவும் நடந்துகொள்வதுடன் விஷமிகளின் வன்செயல் நடவடிக்கைளை தடுத்து நிறுத்துமாறும் திருமதி சிறிமா திஸாநாயக்கா கேட்டுள்ளார், (4-ம் பக்கம் பார்க்க)

## அரசு மரியாதையுடன் காமினி இறுதி சடங்கு நடைபெறும்

(கொழும்பு)
ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்க்கட்சி தலைவருமான காமினி திஸாநாயக்காவின் மரணச்சடங்குகள் இன்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் பூரண அரச, இராணுவ மரியாதைகளுடன் நடைபெறும்.
தற்சமயம் காமினியின் பூதவுடல் கிறீன்பார்க்கிலுள்ள மகாவலி நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.
இன்று பிற்பகல் ஒரு (2-ம் பக்கம் பார்க்க)

## ரணிலுக்கு பயமுறுத்தல்: விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)
முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சிறிகொத்தாவிற்கு அருகாமையில் சென்றுகொண்டிருக்கும் போது அவரை கொலை செய்வதாக விடுக்கப்பட்ட பயமுறுத்தல் சம்பந்தமாக பொலிசார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.
சம்பவம் நடந்தவேளையில் கடமையிலீடுபட்டிருந்த பொலிசாரின் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இந்த பயமுறுத்தல் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மிகவிரைவில் கைதுசெய்யப்படுவார்களென பொலிசார் தெரிவித்தனர்.
சிறிகொத்தாவிற்கு அருகில் ரூபவாஹினி படப்பிடிப்பாளர்களையும் செய்தியாளர்களையும் ஏனைய செய்திதுறையின (4ம் பக்கம் பார்க்க)

### அஞ்சலி செலுத்த சென்ற

## சந்திரிகாவின் மீது தகாத வார்த்தைகள் பிரயோகம்

[கொழும்பு]
''காமினி திஸாநாயக்காவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தச் சென்ற என்னை ஐ. தே. கட்சி ஆதரவாளர்கள் தகாத வார்த்தைகளால் பேசியதுடன் எனது காரையும் சேதப்படுத்தினர்கள்"
இவ்வாறு பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.
இச்சம்பவம் பற்றி பிரதமர் மேலும் தெரிவிக்கையில்:
குண்டுவெடிப்பில் பலியான காமினி திசநாயக்காவின் பூத (4-ம் பக்கம் பார்க்க)

## வாரத்தில்4நாட்கள்

### கிளாலி-பூநகரி படகுசேவை

[யாழ்ப்பாணம்]
தீபாவளி திருநாளை முன்னிட்டு கிளாலி படகுசேவை எதிர்வரும் திங்கள், செவ்வாய் கிழமைகளில் நடைபெறுமென்று தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.
மக்கள் கூடுதலாக கிளாலி நீரேரியூடாக பயணம் செய்வதால் கிழமை நாட்களில் (2ம் பக்கம் பார்க்க)

### சந்திரிகாவுக்கு எதிராக

## சுவரொட்டி ஒட்டியவர்கள் பொலிஸாரால் கைது

(கொழும்பு)
''காமினியை சந்திரிகா கொலைசெய்து விட்டார்" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட சுவரொட்டி ஒட்டியவர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளதாக பொலிஸ் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.
காமினி கொலை செய்யப்பட்டு 24 மணித்தியாலயங்களுக்குள் நாட்டில் பல பாகங்களிலும் ''காமினியை சந்திரிகா கொலை செய்து விட்டார்', புலிகளின் உதவியுடன் சந்திரிகா காமினியை கொலை செய்துவிட்டார்'' என்ற சுவரொட்டிகள் ஒட்டப்பட்டது. இதை உடனடியாக பொலிஸார் தடைசெய்ததுடன் சுவ (2-ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் பதுங்கி தாக்கிய ராணுவத்துக்குபுலிகள்பதிலடி

### ஆயுதம் மீட்பு

(யாழ்ப்பாணம்)
திருகோணமலை இத்திக்குளம் என்னுமிடத்தில் நேற்று முன்தினம் தமிழீழ விடுதலைப் புலிகள்மீது இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தினர்.
படையினர் நடத்திய இத்திடீர்த் தாக்குதலை அடுத்து விடுதலைப் புலிகள் பதில் தாக்குதலை நடத்தினர், தொடர்ந்து படையினர் விடுதலைப் புலிகளால் சுற்றிவளைத்து தாக்கப்பட்டனர்,
இத்தாக்குதலையடுத்து படையினர் பல இராணுவ (4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### MATHS CREDIT

O/l, 94 பரீட்சையில் உயர்ந்த பெறுபேறடைய ஆரம்பத்திலிருந்து மீட்டல் வினுவிடை மூலம் B. Sc. ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன்கோவிலடி, மணல்தறை வீதி திருநெல்வேலி. (சி-1286)

### ஆண்டு 3, 4, 5

23-10-94ல் வெளியிடப்பட்ட ஆண்டு 3 புலமைப் பரிசில்(1996) மாதிரி விஞத்தாள்களையும் 30-10-94ல் வெளியிடப்படும் ஆண்டு 4, ஆண்டு 5ற்கான மாதிரி விஞத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம். மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். எ:4462

### புலமைப் பரிசில் பயிற்சி

வெளிவந்துவிட்டது! விற்பனையாகிறது! ஆண்டு 5 புலமைப்பரிசில் புத்தம் புதிய பயிற்சி. ஆண்டு 3, 4, 5பாடத்திட்டத்தை தழுவியது. விஞத்தாள்களைஉடையது. 24 தமிழ் கட்டுரைகளையும் 14 ஆங்கிலக் கட்டுரைகளையும் உடையது. விசேட கழிவு உண்டு. ஆக்கியோன் திரு. த. அம்பிகைபாகன், புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். எ-4463


## இராஜிஞமா

(கொழும்பு[

'திவயின' சிங்களப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எட்மண்ட் ரணசிங்க தமது பதவியை நேற்றுமுன்தினம் இராஜிஞமா செய்துள்ளார்.

இவர் தமது ராஜிஞமாக் கடிதத்தை திருமதி லக்மினி விஜயவர்த்தஞவிடம்நேற்றுக் கையளித்தார். [க-சி]

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வித் திட்டத்தின் கீழான மாவட்ட மகளிர் குழு பயிற்சி வகுப்பு இன்று சனி காலை 9-00 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும். இதில் மழை காலத்தில் பரவும் தொற்று நோய்கள் பற்றி யாழ்ப்பாண பல்கலைக்கழக வைத்திய கலாநிதி டாக்டர் ஏஸ். பி. ஆர். சீர்மாறன் கருத்துரை வழங்குவார். (சி)

0 0

[நெல்லியடி)

1990-91-ம் ஆண்டுகளில் முறைசாராக் கல்விப் பிரிவில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் 1993-ம் ஆண்டு இலத்திரனியல் பயிற்சி வகுப்பில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று 29-ம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (160)

0 0

]கொழும்புத்துறை[

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளையின் விசேட கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல்3-30மணிக்கு இலக்கம்-33, யாழ்- பருத்தித்துறை வீதியிலுள்ள பணிமனையில் இயக்கத் தலைவர் திரு. ஆ. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும். (54]

0 0

[உடுவில்)

இமையாணன் மகாவித்தியாலயத்தினரால் இன்று 29ம் திகதி நடாத்தப்படவுள்ள கலைத்தென்றல் நிகழ்வில்கல்வி மேம்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. க. அருண் மாஸ்ரர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். [109]

## இன்று நடைபெறவுள்ள

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யின் பல இடங்களிலும் இருந்து பெருமளவு ஐ, தே. க. ஆதரவாளர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்கப்படுகிறது,

இதேவேளை கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தமிழர்களின் நடமாட்டம் பெரிதும் குறைவாகவே காணப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் தமிழர்கள் பெருமளவில் வாழும் பகுதிகளில் இராணுவமும், பொலிசாரும் இரவு பகலாக தீவிரரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. இன்று இடம் பெறும் காமினியின் இறுதிச் சடங்கில் ஐ.தே.க. ஆதரவாளர்கள் வன்முறைகளிஎ ஈடுபடலாம் என்பதால் பொலிசார் தீவிரபாதுகாப்பு நடவடிக்கைகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன, வி-இ-ரி

## வாரத்ல்

[1ம் பக்கத் தொடர்ச்சி[

செவ்வாய், புதன், வெள்ளி, சனி ஆகிய கிழமை நாட்களில் இனிமேல் படகுசேவை வழமையாக நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இன்று சனிக்கிழமை வழமைபோல இப்படகுசேவை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. —ரி


## அறிவித்தல்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர்சங்க நிதிக்காக 1994-10-30திகதி பி. ப 6-00 மணிக்கு நடைபெறவிருந்த

''கலைத் தென்றல்''

நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது. இந்நிகழ்வு நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். இதனுல் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துகிறோம்.

நிறைவேற்றுக்குழு

பழைய மாணவர் சங்கம்

யா/நெல்லியடி ம. ம. வி

கரவெட்டி. (சி-1287)

## வேலைவாய்ப்பு

### தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொருத்த மானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

விண்ணப்பதாரிகள்:

1. 18 வயதுக்கு மேற்பட்டவராகவும்,
2. க. பொ. த. (சாதாரணம்) தரத்தில் தமிழும், கணிதம் எண்கணிதம் / தூயகணிதம் உட்பட நான்கு திறமைச் சித்தியுடன் கூடியதாக 6 பாடங்களில் சித்தியடைந்திருக்கவேண்டும். அல்லது இதற்கு சமமான பரீட்சை ஒன்றில் சித்தியடைந்திருக்க வேண்டும். க. பொ. த உயர்தரத்தில் பெற்ற பெறுபேறுகளும் வேலைமுன்அனுபவமும் விசேட தகைமைகளாக கணிக்கப்படும்.
3. ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் யாவும் பரிசீலிக்கப்பட்டு தகுதியானவர்கள் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, அதில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு நியமனம் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 12-11-1994

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

பணிப்பாளர்,
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ அரசியல் துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்
தாவடி,
தமிழீழம்.

[ஏ-4459)


## சந்திரிகாவுக்கு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ரொட்டிகளை ஒட்டியவர்களை ஒட்ட முற்பட்டவர்களையும் மேற்படி சுவரொட்டிகளை பெருந்தொகையாக ரகசியமாக எடுத்துச்சென்ற பல வாகனங்களும்பொலிஸாரிடம் சிக்கியுள்ளன என்று பொலிஸ் தலைமைச் செயலகம் மேலும் அறிவித்துள்ளது. வி-ரி

## குண்டை

(1-ம் பக்கத்தொடாச்சி)

அறிக்கை ஒன்றின் மூலம் முறையாக வெளியிட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சம்பந்தப்பட்ட பெண் 25 வயதுடையவர். உடம்பில் இவர் அதிக சக்தி வாய்ந்த குண்டை கட்டிக்கொண்டு வெடிக்கவைத்துள்ளார். இவர் ஒரு தற்கொலை படையாளி.

கூட்டமேடைக்கு முன்னல் மக்களில் ஒருவராக இந்தப் பெண் நின்றுள்ளார். அங்கிருந்து இவர் சக்தி வாய்ந்த குண்டை வெடிக்கவைத்துள்ளார்.

அங்கு காணப்பட்ட சிதறிய உடற்பகுதிகளைப் பரிசோதனை செய்த உடற்கூறியல் நிபுணர்கள் அது ஒரு பெண்ணின் உடலைச் சார்ந்தது எனவும் அந்தப் பெண் 26 வயது மதிக்கத்தக்கவராக இருப்பார் எனவும் தெரிவித்துள்ளனர். சாதாரண உயரமும், பொது நிறமும் உடையவராக இவர் இருந்திருப்பார். இந்தப் பெண்ணின் அடையாளம் இப்போது உறுதிப்பட்டிருப்பதாகவும் பொலிசா அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. -இ

## அரசமரியாதையுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மணிக்கு இறுதி ஊர்வலம் மகாவலி நிலையத்திலிருந்து ஆரம்பாகும்.

இந்தியப் பிரதமரின் பிரதிநிதியான பாராளுமன்ற உறுப்பினர் சுசில்குமார் சிந்தே காலஞ்சென்ற காமினி திஸாநாயக்கவிற்கு இறுதி அஞ்சலி செலுத்தவென நேற்று முன்தினம் இலங்கை வந்துசேர்ந்தார்.

அவர் ஜஞதிபதி டி. பி. விஜயதுங்காவை ஜஞதிபதி மாளிகையில் சந்தித்து இந்தியப் பிரதமர் அனுப்பி வைத்த அனுதாபச் செய்தியை அவர் விஜயதுங்காவிடம் ஒப்படைத்தார். -ரி

## குண்டை சுமந்த

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பட்டது.

கிருன்ட்பாஸ் கூட்டத்தில் குண்டை வெடிக்க வைத்த பெண் இந்தக்கூட்டத்திலும் காணப்பட்டதாக அந்த வீடியோ ஒளிப்பதிவு நாடாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒளிப்பதிவு நாடாக்களை கொழும்பிலுள்ள பி. பி. ஸி. நிருபர்களுக்கு காமினி திசாநாயக்காவின் இறுதிச் சடங்குகளை ஏற்பாடு செய்திருக்கும் குழுவைச் சேர்ந்தவர்கள் வழங்கியுள்ளனர்.

இதேவேளை குண்டுவெடிப்பு நிகழ்ந்த இடத்திலுள்ள மொட்டைமாடிஒன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் மண்டை ஓட்டை மருத்துவ நிபுணர்கள் அடையாளம் காட்டியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

## பேச்சில் தடங்கலேற்படின் மாற்றுப் பாதை தேவை

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தையில் தடங்கல் ஏற்படும் பட்சத்தில் மாற்றுப் பாதைகள் கண்டுபிடிக்கப்படவேண்டும் என கம்போடிய சங்கராஜ அதிசங்கைக்குரிய மகா போஷானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையில் தங்கியிருக்கும் அவர் மேலும் தெரிவிக்கையில், சமாதானப் பேச்சுவார்த்தைகள் மிகுந்த அவதானத்துடனும் கவனத்துடனும் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இவர்கம்போடிய சமாதான இயக்கத்தின் ஆரம்ப கர்த்தாவும் வழிகாட்டியுமாவார் என்பதும் குறிப்பிடத்தக்கது. -க-சி

## கலைஞர்கள், பிக்குமாரும் குண்டு வெடிப்பில் பலி

(கொழும்பு)

கிராண்ட்பாஸில் அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின்போது காமினி திசநாயக்கா உட்பட முக்கியஸ்தர்கள் பலர் கொல்லப்பட்டதுடன் கலைஞர்கள், பிக்குமாரும், பொலிசாரும் கொலையுண்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அச்செய்திகள் மேலும் தெரிவிக்கையில்: கொல்லப்பட்ட கிறிஸ்ரி பெரேராவுடன் அவரது மனைவியும் மகளும், உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன், உதவிப் பொலிஸ் அதிகாரிகளும் உயிரிழந்ததாகவும் தெரிவித்துள்ளன.

இச்சம்பவத்தையடுத்து 80 பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பெருமளவினர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-சி)

## யாழ். மாவட்ட விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவிஞல் நடாத்தப்படும் யாழ். மாவட்ட விளையாட்டுவிழா இன்று சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. காலை தடகள நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. இதில் வலய ரீதியாக நடாத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற போட்டியாளர்கள் பங்குபற்றுகின்றனர்.

பிற்பகல்நிகழ்ச்சியாக வலைப் பந்தாட்டப்போட்டி, கரப்பந்தாட்ட (செற்றப்) போட்டி என்பன இடம்பெறும். வலைப் பந்தாட்டப்போட்டியில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஆகியன பங்குபற்றுகின்றன. கரபந்தாட்டப் போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் என்பன போட்டியிடுகின்றன.

இரவு நிகழ்ச்சியாக யாழ். மாவட்ட ரீதியிலான மல்யுத்த சுற்றுப்போட்டி நடைபெறும். அத்துடன் கபடி கண்காட்சிப் போட்டியும் இடம்பெறும். -சி

மணிவாக்கு

தீவிர ஆசையினல் சில காரியங்கள்வெற்றி பெறுகின்றன. அதை விட அமைதியான முன்யோசனையால் பல காரியங்களில் வெற்றி கிடைக்கின்றன.
- தூஸிடைடில்

# சமாதான முயற்சியின் போது குண்டுகள் வெடிப்பது சகஜம்

— கதிர்காமர் கூறுகிருர்

(கொழும்பு)

பல நாடுகளில் சமாதான முயற்சிகள் நடைபெறும் வேளையில் காமினி திசநாயக்க கொலையுண்ட குண்டு வெடிப்புச் சம்பவம் போன்று அங்கும் பல நிகழ்கின்றன என்பதைத் தம்மால் உதாரணங்கள் மூலம்குறிப்பிடமுடியும் என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இது பற்றிமேலும் அவர் கூறுகையில்: காமினியின் கொலை குறித்து பூரண விசாரணை நடத்தப்படும். முன்னைய அரசு போன்று கொலை விசாரணைகளை நாம் மூடி மறைக்கமாட்டோம்.

முன்னுள் ஜனதிபதி பிரேமதாசா கொலையுண்டபோது அந்த இடம் உடனடியாகக் கழுவிச் சுத்தம் செய்யப்பட்டதன் மூலம் விசாரணைகளுக்கான தடயங்கள் அழிக்கப்பட்டன. லலித் அத்துலத்முதலியின் கொலையின்போதும் இவ்வாறே நடந்தது. ஆனல் காமினியின் கொலை குறித்து விசாரணை நடாத்த அவரது குடும்பத்தினர் விரும்பினல் வெளிநாட்டு உதவி கூடப் பெறப்படும்.

நான் இலங்கையில் பல வருட காலமாக வழக்கறிஞராக இருக்கிறேன். முன்னைய ஆட்சிக் காலத்தில் அரசியல் கொலைச் சம்பவங்கள் நடைபெற்றபோது தடயங்கள் அழிக்கப்பட்டதை இதற்கு முன் நான் ஒரு போதும் அறியவில்லை என வும் கூறியுள்ளார். (ம-சி)

படையினர் மீது பிரதமருக்கு

## பூரண நம்பிக்கை

(கொழும்பு)

பாதுகாப்புப் படையினர் மீது தனக்குப் பூரண நம்பிக்கையுண்டு என்று பிரதமந்திரி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: தமது அரசாங்கம் பதவிக்கு வந்த பின்பு படையினருக்கு பல அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவித்தார்.

சமாதானத்தைக் குழப்பப் படையினர் முயல்வதாகவும் அதற்கு அரசு ஒருபோதும் இடமளிக்க மாட்டாதெனவும் பிரதமர் சந்திரிகா படையினர் மீது கண்டனம் தெரிவித்ததை தொடர்ந்து படையினர் மத்தியில் பெரும் அதிருப்தி ஏற்பட்டமையும் தெரிந்ததே. (ம-சி)

## நமது நோக்கு

### மாறும் கோலங்கள்!

ஜனதிபதித் தேர்தலிலிருந்து முற்போக்கு முன்னணி வேட்பாளர்நிஹால் கலபதி விலகியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படுமெனப் பிரதமர் வாக்குறுதி அளித்தால் தான் ஒதுங்குவதாக ஏற்கனவே அறிவித்திருந்தார்.

பிரதமர் சந்திரிகா அந்தச் சவாலை ஏற்று பகிரங்க வாக்குறுதியைஅளித்தார். ஆனல் உடனடியாக கலபதி விலகாது, வேறு சில நிபந்தனைகளைப் போட்டார்.

ஆனல் - காமினி மறைவால் ஏற்பட்ட புதிய அரசியற் கோலத்தால், கலபதியும் விரைவாகத் தீர்மானம் எடுக்கத் தள்ளப்பட்டிருக்கிருர்; தனது விலகலை அறிவித் துள்ளார்.

ஜே. வி. பி.யினர் பல பிரிவுகளாகப் பிரிந்து செயற்படுவதால் தமது முழுப் பலத்தையும் தேர்தலிற் காட்ட முடியாத கோலமே தெற்கில் உண்டு.

எனினும், முற்போக்கு முன்னணி சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் சுமார் ஒரு லட்சம் வாக்குகளைப் பெற்ற சங்கதியை நாம் மறப்பதற்கில்லை.

படையினரின் கொடுரங்களால் தாம் பூரணமாகத் துடைத்தெறியப்படவில்லை என நிரூபித்துக் காட்டினுர்கள்.

புதைகுழிகளைத் தோண்டியும், ஊழல்களைக் கிளறியும், பேட்டிகளிற் சற்று 'சூடாகப்' பேசியும் படையினரிடையே சலசலப்பை ஏற்படுத்தியவர் சந்திரிகா.

மறைந்த காமினியார், இதனைப் பயன்படுத்தி இராணுவத்தினரின் ஆதரவைத் திரட்டி வந்த கோலத்தையும் கண்டிருந்தோம்.

எனவே - படையினராற் பாதிக்கப்பட்ட ஜே. வி. பி.யினர் அவருக்கு எதிராகப் பிரசாரம் செய்ய முற்பட்டதும், புதிய விபூகம் வகுக்க முற்பட்டதும் விளங்கிக்கொள்ளக் கூடியதே!

அனுதாப அலையினல் சிறிமா திசநாயக்காவிற்கு வாக்குகள் சென்றுல் சந்திரிகாவின் வாக்குப்பலம் சரியக்கூடும் என்றகோலம் தென்பட்டது.

எனவே - இதனைச் சரி செய்யக் கூடியவிதத்தில் கலபதி தேர்தலிலிருந்து ஒதுங்கியது புரியக்கூடிய புதிய கோலமே!

இதேவேளை - ஐ.தே.க. விற்குள்ளேயே ரணில், ஹேமா ஆகியோரால் புதிய கோலங்கள் ஏற்படக்கூடும்.

தேர்தல் நெருங்க நெருங்க, புதிய நிலைப்பாடுகள் தோன்றி, புதிய செய்திகள் வருவதும், கோலங்கள் மாறுவதும் இலங்கை அரசியலைக் கலக்காமலா விடும்!

வானெலி, தொலைக்காட்சியில்

# காமினியின் இறுதிச் சடங்கு முக்கியத்துவம் வழங்கப்படாது?

(கொழும்பு)

காமினி திசநாயக்காவின் இறுதிச் சடங்குகள் நடைபெறும் சனிக்கிழமையை தேசிய அளவில் துக்க தினமாக அனுஷ்டிக்கநடவடிக்கை எடுக்கப்படும் என்று முன்னர் கூறிய அரசாங்கம் தற்போது அதிலிருந்து விலகிநிற்பதாக காமினி திசநாயக்காவின் மைத்துனர் டாக்டர் விக்கிரம விரசூரியா குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில் காமினி திசநாயக்காவின் இறுதிச்சடங்குகள் ரூபவாஹினியில் ஒளிபரப்பப்படுமென்றும் இதுபற்றிய நிகழ்வுகள் வானெலியில் நேர்முகமாக அஞ்சலி செய்யப்படுமென்றும் கூறிய அரசாங்கம் தற்போது தனது வாக்குறுதிகளை மீற முற்படுவதாகவும், இறுதி நாளான இன்று சனிக்கிழமைதினத்தை தேசிய ரீதியில் துக்கதினமாக வும் அனுஷ்டிப்பதற்கு தற்போது அரசு மறுப்புத் தெரிவிப்பதாகவும் கூறினர். (வி-இ)

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-10-29 சனி இரவு

08-01 அறிவியல் கலசம்.
08-10 நிகழ்வும் பகிர்வும்
08-25 நேயர் கடிதங்கள்
08-30 செய்திகள்
08-40 சித்திரம் — சந்திரா தனபாலசிங்கம் எழுதிய ''சங்கத் தமிழில் புறநானூறு''

1994-10-30 ஞாயிறு காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 களத்தில் மலர்ந்தவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 களத்தில் மலர்ந்தவை

## காமினி கொலைக்கு ஐ. தே. க.வே காரணம்

— சந்திரிகா கூறுகிருர்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசநாயக்கா உட்பட 56 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாக இருக்கலாம் என்று பிரதமர் சந்திரிகா குற்றஞ்சாட்டியதாக 'வெரித்தாஸ்' தெரிவித்தது.

வெரித்தாஸ் மேலும் தெரிவிக்கையில்; நடந்து முடிந்த வெடிகுண்டுச் சம்பவம் ஐ. தே. க. வினரின் வேலையாக இருக்கும் எனவும், பிரதமர் சந்திரிகா குற்றஞ்சாட்டினுர்.

'இச்சம்பவத்திற்கு' அரசும் புலிகளுமே காரணமென ஐ. தே. க.வினர் ஏற்கனவே குற்றம்சாட்டியிருப்பதும் தெரிந்ததே. -ம-சி

ஐ. தே. கவுக்குள்

## எரிமலை குமுறல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உட்பூசல் இப்போது அதிகரித்துள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

காமினி திசநாயக்கா படுகொலை செய்யப்பட்டதை அடுத்தே கட்சிக்குள் உட்பூசல் அதிகரித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

காமினி திசநாயக்காவின் மனைவி ஜனதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டது திரு. ரணில் விக்கிரமசிங்கா எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டன போன்றவை உட்பூசல் எரிமலையாக்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது. (இ)

## இராசி பலன்

29 - 10 - 1994
சனிக்கிழமை
(தமிழுக்கு ஐப்பசி- 12)

தசமி பி. ப. 5-00 வரை ஆயிலியம் காலை 7-00 மணி வரை இராகுகாலம் காலை 9-02 முதல் 1-33வரை, சுப நேரம் மாலை 3-03முதல் 4-33 வரை மரணயோகம்.

மேடம்- தொழில் போட்டி மனவேதனை அலைச்சல்.

இடபம்- விருந்தினர் மகிழ்ச்சி, பயணமுயற்சி, காரிய சித்தி.

மிதுனம்- நண்பர் வெறுப்பு கல்வியில் சிந்தனை விவாதம்.

கடகம்- தொழில் சிறப்பு, மாமனர் அறிவுரை, தியாகம்.

சிங்கம்- வாதத்திறமை, சகோதரி துயர், வீண் செலவு.

கன்னி- புதிய உறவு, வெளியார் தலையீடு, குடும்பசுகம்,

துலாம்- வெற்றிக்களிப்பு, தெய்வீக சிந்தனை மனத் துணிவு.

விருச்சிகம்- மனப்போராட்டம், கடன்படல், துயரச் செய்தி.

தனுசு- பிறர் குற்றம், வாக்குவாதம், அமைதிக் குறைவு.

மகரம்- தாயன்பு, கடமையுணர்வு, அறிஞர் ஆசி.

கும்பம்- நினைத்ததைச் சாதித்தல், பணப்புளக்கம் தீவிரபோக்கு.

மீனம்- குடும்ப தகராறு, பணியாள் வன்மம், தனிமைப் படல்,

—ஜோஸ்யர்

### பலதும் பத்தும்

அறணை

'அறணை கடித்தால் மரணம்!' என்பது பழமொழி. ஆனல்...... அது சாதாரணமாக யாரையும் கடிப்பதில்லை. கடித்தால் விஷம் அதிகம்.

பாம்பிற்குப் பல்லில்மாத்திரம்தான் விஷம். ஆனல்... அறணைக்கோ பற்களிலும் வாயிலும் விஷம்! பற்கள் ஆழமாகப் பதிந்திருந்தால் விஷம் அதிகம். காயத்திலிருந்து இரத்தம் வருமானல் விஷம் கலந்திருப்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

உடன் வைத்திய ஆலோசனை பெறவேண்டியது அவசியம். தகவலுக்காக மட்டும் பழைய வைத்திய முறையைத் தருகிறேம். சாரணை என்ற செடியின் வேரினை அரைத்துக் கொடைப்பாகளவு உண்ணவேண்டும் சிறிது நீரிலிட்டுக் கடிவாயிலிற் பற்றுப்போட வேண்டும்!

—மயூரன்

### வீட்டுக்குப் பழ மரங்கள் வீதிக்கு நிழல் மரங்கள்

காமினி கொலை குறித்து

## விசாரணைக்கு முன் ஊகங்கள் தெரிவிக்க முடியாது

(கொழும்பு)

திரு. காமினி திசநாயக்காவின் கொலைபற்றிய விசாரணைகள் முடிவடைவதற்கு முன்னர் எந்தவித ஊகங்களும் தெரிவிப்பதற்கு அவசியம் இல்லை என கேணல் அனுருத்த ரத்வத்த பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

கடந்த காலத்தைப் போலல்லாது சி. ஐ. டி. பிரிவினர் இம்முறை ஒழுங்கான விசாரணைகளை மேற்கொள்வார்கள்.

இச் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வெளிநாட்டு நிபுணர்களின் உதவி தேவையா என காமினியின் குடும்ப அங்கத்தவர்கள் பொலிஸ்மா அதிபரினல் கேட்கப்பட்டிருக்கிறர்கள்.

டாக்டர் விக்கிரம சூரியா, சி. ஐ. டி. பிரிவினரின் திறமையில் பூரண நம்பிக்கை இருப்பதாகவும் அத்தகைய தேவை ஏற்படாது என்றும் கூறியுள்ளார்.

ஜனதிபதி வழக்கறிஞர் திரு. தயாபெரேரா, காலஞ்சென்ற திரு. காமினி திசநாயக்காவின் சார்பாக விசாரணைகளில் ஈடுபட நியமிக்கப் பட்டுள்ளார் என்றும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மேலும் தெரிவித்தார். [கே-ரி]

## ரணில் குடும்பத்தவர் சிறிமாவிடம் ஆட்சேபனை

(கொழும்பு)

எதிர்க் கட்சித் தலைவரும், ஐ. தே. கட்சிப் பிரதித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, காமினி திஸநாயக்காவின் ஆதரவாளர்களால் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்ட சம்பவம் குறித்து திருமதி சிறிமா திசநாயக்காவிடம் பலத்த ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்காவின் குடும்பத்தினருக்கு நெருங்கியவர்கள் இவ்வாட்சேபனையை திருமதி திசநாயக்காவிடம் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

ரணிலுக்கு விடுக்கப்பட்ட கொலை மிரட்டலையடுத்து அவரது பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். (க-சி)

நாடாளுமன்றம்

### நவம்பரில் கூடும்

(கொழும்பு)

நாட்டில் அவசர கால நிலைமை நீடிப்புக் காரண மாகநாடாளுமன்றம் நவம்பர் மாதம் 1ம் திகதி கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பில் காமினி கொலையையடுத்து

# இனக்கலவர முறுகல்நிலை!

லண்டன்)

காமினி திஸா நாயக்காவின் கொலையையடுத்து ஐ. தே. கட்சியினர் சந்திரிகா அரசுடன் நேரடியாக மோதும் இதனால் இனவெறியும் முறுகல் நிலையை அடையும் என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

பி. பி, ஸி. மேலும் தெரிவித்ததாவது: நாடு ஒரு உறுதி நிலையை நோக்கி நடைபோடும் நல்லவேளையிலே இந்த இனகலவர முறுகல் நிலை உருவாகலாம். முறுகல் நிலையும் தடைகளும் அமைதிப் பேச்சு வார்த்தை மீளத் தொடங்குவதை தாமதிக்கலாம்.

இனக்கலவரத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்ட 1983ம் ஆண்டுக்கு நாட்டின் நிலைமை பின்தள்ளப்படலாம்.

பாதுகாப்பு படைகளின் தளபதி நாட்டின் அரசு தலைவரேஇவரோ ஐ. தே. வின் தலைவர் இந்த நிலையிலே சந்திரிகா தனது அரசியல் வாழ்கையில் ஆகப்பெரிய சவாலை எதிர்கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறார்.

நாட்டிலே அமைதியைக் கொண்டுவரவும் நல்லிணக்கத்தைஉருவாக்கவும் நேர்மையானதும் மனம்திறந்ததுமான ஒருபோக்கையே அவர்கடைப்பிடிக்க முயன்றாராயினும் அதுவே திருப்பி அடித்து இலங்கையில் அமைதி திரும்பும் நம்பிக்கையை பின்தள்ளலாம் என்றும் பி. பி. ஸி மேலும் தெரிவித்தது. -ரி

## விசேட கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று காலை 9-30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறும்,

காப்புறுதிக் கூட்டுத்தாபனம், நிலஅளவைத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் ஆகியவற்றின் ஊழியர்களுக்கான கலந்துரையாடல் யாழ், நாவலர் மண்டபத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும்.

உள்ளூராட்சித்திணைக்களம், வேலணை, ஊர்காவற்றுறை, நல்லூர்பிரதேசசபை ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 11 மணிக்கு யாழ்,நாவலர் மண்டபத்தில நடைபெறும். அனைவரையும் தவறாதுகலந்து கொள்ளும்படி தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுக்கொண்டுள்ளார். [ரி]

## பிரிட்டிஷ் மகாராணி
# அனுதாபச் செய்தி

(கொழும்பு)

காமினி திஸாநாயக்கா படுகொலை செய்யப்பட்டதற்கு அனுதாபம் தெரிவித்து பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் அனுதாபச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதுவர் ஜனதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் இந்த அனுதாபச் செய்தியை நேற்று கையளித்தார்.

இலங்கையில் அமைதி ஏற்படும் வேளையில் இவ்வாறான ஒருசம்பவம் நிகழ்ந்திருப்பது கவலைதருகிறது என்றும் அந்தச் செய்தியில் தெரிவித்துள்ளார்'

## பல இடங்களில்
# வன்செய்வ் வெடிப்பு

[கொழும்பு]

காமினி திஸாநாயக்காவின் மரணத்தையடுத்து நாட்டின் பல்வேறு பாகங்களிலும் முறையற்ற சம்பவங்கள் நடைபெற்றிருப்பதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

பொ. ஐ. முன்னணியின் ஆதரவாளர் ஐ. தே. க.ஆதவாளர்களால் தாக்கப்பட்டுள்ளார்கள்.

இத்தகைய வன்செயல்களினால் எதிர்க்கட்சி தலைவர் காமினி திஸாநாயக்காவின் இறுதிக் கிரியைகள் இன்று நடத்துவதற்கு பல்வேறு பிரச்னைகளை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது, [ரி]

கிரிக்கெட்

## இந்தியா வெற்றி

(புதுடில்லி)

இந்தியாவில் மூன்று நாடுகளிடையே நடைபெற்று வரும் ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் விளையாடுவதற்கு இந்தியா தகுதி பெற்றுவிட்டது.

இந்தியாவுக்கும் நியூஸிலாந்துக்குமிடையில் நேற்று பரோடாவில் நடைபெற்ற போட்டியில் இந்தியா 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து 50 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 269 ஓட்டங்களைப் பெற்றது. ருதபோட் 108 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்தியா 49·1 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 271 ஓட்டங்களைப் பெற்றது. டென்டுல்கர் 115 ஓட்டங்களையும, மஞேஜ் பிரபாகர்74 ஓட்டங்களையும் பெற்றனர். -வி

ரணிலுக்கு

(1-ம் பககத்தொடர்ச்சி)

ரையும் தாக்கிய சம்பவம் பற்றியும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. [ரி]

அஞ்சலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக நான் அவரது இல்லத்துக்குச் சென்றபோது அங்கு கூடியிருந்த ஐ. தே. க. ஆதரவாளர்கள் என்னை தகாதவார்த்தைகளால் பேசினார்கள், நான் காரிலிருந்து இறங்கி உள்ளே சென்றபோது எனது காருக்கும் சேதம் விளைவித்தார்கள்.

ஒரு மரண வீட்டுக்குச் செல்லும் ஒருவரை எப்படி வரவேற்க வேண்டுமென்ற பண்பே தெரியாத ஐ. தே. கட்சியினர் இக்குண்டுவெடிப்புச் சம்பவத்தை வைத்து அரசியல்லாபம் தேட முயற்சிப்பது வெட்கத்துக்குரிய ஒரு செயலாகும்'' என்று பிரதமர் கூறினார். விரி

## யாழ். சுகாதார பிராந்தியத்தில்
# 60வயதுக்கு மேற்பட்டோர் கடமையாற்ற அனுமதி

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதார பிராந்தியத்தில் கடமையாற்றும் 60 வயதுக்கு மேற்பட்ட டாக்டர்கள், வைத்திய நிபுணர்கள் மற்றும் உத்தியோகத்தர்களை தொடர்த்தும் சேவையாற்ற தாம் அனுமதி வழங்குவதாகவும், அவர்களை வேலைநீக்கம் செய்யவேண்டாம் என்றும் கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சு யாழ். சுகாதார திணைக்கள பிரதி மாகாண பணிப்பாளர் அலுவலகத்திற்கு நேற்று அனுப்பி வைத்துள்ள அவசர செய்தியொன்றில் அறிவித்துள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக அனுப்பி வைக்கப்பட்ட இந்த அறிவித்தலை யாழ். நகரிலுள்ள வதிவிடப் பிரதிநிதி யாழ், சுகாதார திணைக்கள பிரதி மாகாண பணிப்பாளருக்கு நேரில் சென்று தெரிவித்தார். 60 வயது கடந்தவர்களை வேலைநீக்கம் செய்யும் திட்டத்தினால் யாழ், மாவட்டத்தில் வைத்திய சேவைகள் மற்றும் சுகாதார சேவைகள் பெரும் பாதிப்பு அடையவிருப்பதாகவும், இதனை மறுபரிசீலனை செய்யுமாறும் யாழ். சுகாதாரசேவை பிரதி மாகாண பணிப்பாளர் வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சிற்கும், கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சிற்கும் கோரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது, -71-ரி

# காமினி கொல்லப்பட்டது
# பிரதமருக்கு பலத்த அடி!

(லண்டன்)

காமினி திஸாநாயக்கா படுகொலை செய்யப்பட்டது பிரதமர் சந்திரிகாவுக்கு ஒரு பலத்த அடி என்று பி.பி.ஸி. செய்தி விமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டது.

அச்செய்தி விமர்சனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாது: அமைதிப் பேச்சு வார்த்தையை நடத்துவதற்கு நாடளாவியபரந்துபட்ட ஆதரவை சந்திரிகா திரட்டியிருந்தார். அதைவிட விடுதலைப் புலிகள் தொடர்பாகபெரும்பான்மைச் சிங்கள மக்களிடத்தில் நிலவிய பொதுவான அபிப்பிராயத்தை மாற்றுவதிலும் ஓரளவுவெற்றிகண்டார். இப்போது சந்திரிகாவிற்கு பலத்த இடர்பாடு விடுதலைப் புலிகள் நல்லெண்ணம்பற்றி சிங்கள மக்களை இனியும் நம்ப வைக்க வேண்டுமே, விடுதலைப் புலிகள் காமினி திஸாநாயக்காவை கொலை செய்தார்களா இல்லையா என்பதுபற்றி அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வரக்கூடாது என்ற தேவையிருக்கிறது என்று கூறப்போய் ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்களின் வசவுகளை வசமாக வாங்கிக்கட்டும் பரிதாப நிலை சந்திரிகாவுக்கு!

நடந்த படுகொலையை அரசியல்இலாபத்துக்காக எவ்வளவுக்குப் பயன்படுத்த முடியுமோ அவ்வளவுக்குச் சக்கை புளிகிறது ஐ. தே.க, என்றும் தெரிவிக்கப்பட்டது. (ரி)

## யாழ். மாவட்டத்துக்கு
# உணவுப் பொருள்கள் அனுப்ப நடவடிக்கை

[கொழும்பு)

உணவுப் பொருட்கள், மண்ணெண்ணை மற்றும் சிமெந்து, சைக்கிள்கள் ஆகியன உட்பட பல பொருட்கள் யாழ்.மாவட்டத்துக்கு அனுப்பி வைக்கப்படுவதாக புனர்வாழ்வு அமைச்சின் மேலதிக ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

கோமாரி கப்பல் திருமலை துறைமுகத்திலிருந்து மூவாயிரம் மெற்றிக் தொன் மாவை ஏற்றிக்கொண்டு இன்னும் இரண்டு தினங்களில் பருத்தித்துறைக்கு புறப்படும் அதே சமயம் மாகோ கப்பல் கொழும்பிலிருந்து எண்ணாயிரம் பரல்மண்ணெண்ணையை ஏற்றிக்கொண்டு நாளை புறப்பட்டுச் செல்லும் தனியார் வர்த்தகர்கள் பொருட்களை வடபகுதிக்கு எடுத்துச்செல்வதற்கும் புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சு உதவி வருகிறது. இவர்களுக்கென ஒழுங்கு செய்யப்பட்ட ஹபரண கப்பல் சிமெந்து சைக்கிள்கள் மற்றும் பொருட்களை தற்பொழுது கொழும்பு துறைமுகத்தில் ஏற்றிக்கொண்டிருக்கிறது.

இந்தக்கப்பல் இன்னும் மூன்று தினங்களில் பருத்தித்துறைக்கு புறப்பட்டுச் செல்லும்.

இதேவேளை மடுவுக்கு தரைமார்க்கமாக உணவுப்பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன. 180 மெ. தொன் உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு 18 லொறிகள் நாளை மடுவுக்கு செல்லவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## கொலைக்கு புலிகள் பொறுப்பேற்றாலும்
# இனப்பிரச்னையை தீர்க்க முயற்சிகள் எடுக்கப்படும்

[கொழும்பு[

காமினி திஸாநாயக்காவின் கொலைக்கு விடுதலைப் புலிகள் பொறுப்பேற்றாலும் கூட, இனப்பிரச்னையை அரசியல் ரீதியாகத் தீர்த்து வைப்பதற்கு தொடர்ந்து முயற்சி எடுக்கப்படுமென்று பிரதம மந்திரி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: விடுதலைப்புலிகளோடு தமது அரசாங்கம் பேச்சுநடத்திய போதிலும் தமது அரசாங்கம் அதன் நடவடிக்கைகளை மூடிமறைக்க முற்படவில்லையென்றும் அரசியல் நிலைமை கடந்தகால நிகழ்வுகள் என்பனவற்றைக் கருத்தில் கொண்டு விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை மூலமே பிரச்னையைத் தீர்க்க கடமைப் பட்டுள்ளனர் என்று தாம் நம்புவதாக தெரிவித்தார்.

காமினி திஸாநாயக்காவின் கொலை தொடர்பாக உடனடியாக எந்தவித முடிவும் எடுப்பது தவறாகும் எனக் கூறிய பிரதமர் சந்திரிகா

பிரதமர் சந்திரிகா' அரசாங்கம் விடுதலைப்புலிகளுடனே பேச்சுக்களை நடத்த வேண்டுமென்பதை எவரும் மறக்கக் கூடாது எனவும் குறிப்பிட்டார். — ரி

மரணச்சடங்கின்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தமது மறைந்த கணவரின் மரணச்சடங்கை வன்முறைச் சம்பவங்கள் மூலம் குழப்புவதற்கு சில தீய சக்திகள் மேற்கொண்டு வருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்தும் நாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் தகவல்கள் கிடைத்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார் .-ரி

சூத்திரதாரிகளை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பல பகுதிகளிலும் பொலிசாரின் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தியுள்ளன.

விசேஷ பயிற்சி பெற்ற பொலிசார் இந்த தேடுதல் நதுவடிக்கையில் மேலதிகமாக ஈடுபட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் தொடர்பான விசாரணைகளையும் பொலிசார் தீவிரப்படுத்தியுள்ளனர் என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. -இ

திருமலையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தளபாடங்களைக் கைவிட்டு தப்பியோடினர். இச்சம்பவத்தில் படையினர் தரப்பில் ஏற்பட்ட இழப்புக்கள்பற்றி ஏதுவும் தெரியவரவில்லை

மேற்படி தாக்குதலில் 44 மி. மீற். எறிகணைகள் -2, பொதுப்பயன்பாட்டு இயந்திரத் துப்பாக்கி தொடர் ரவைகள்-73, நோட்டோ ரவைகள்-7, எம் 11 ரக குண்டு-1, மழைக்கவசட்-1, தண்ணீர் கொள்கலன்-2, கத்தி- 1, தொப்பிகள்-2 என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன,

இத் தாக்குதலில் விடுதலைப் புலி தரப்பில் இழப்புகள் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது, (ரி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Nomber B/16336/B: